



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரபியுல் ஆகிர் பிறை 5 ஹிஜ்ரி 1437
Friday of Rabiyul Akhir 5th Hijri 1437
15th January 2016

| | |
|---|---|
| தலைப்பு: | ஒரு முஸ்லிமை காபிர் (இறைமறுப்பாளன்) என்று கூறுவதில் உள்ள எச்சரிக்கைகள்! |

| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>www.sunnathwaljamath.com |

*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | ஒரு முஸ்லிமை காபிர் (இறைமறுப்பாளன்) என்று கூறுவதில் உள்ள எச்சரிக்கைகள்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! நமக்கு இறைநம்பிக்கையை கொடுத்து நம் அனைவரையும் மிகவும் கண்ணியமாக வைத்திருக்கிறான். பெரும் பாவங்கள், கீழ்த்தரமான செயல்கள், இறைமறுப்பு கொள்கை போன்ற அனைத்தையும் நமக்கு வெறுப்பிற்குரியதாக ஆக்கி வைத்துள்ளான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

கவனமாக கேளுங்கள்! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(59:18)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَا قَدَّمَتْ لِغَدٍ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ

“நம்பிக்கையாளர்களே! நீங்கள் (மெய்யாகவே) அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனும் (மறுமை) நாளுக்காக, தான் எதனைத் தயார்படுத்தி வைக்கின்றான் என்பதைக் கவனித்து அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்துகொள்ளவும். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவைகளை நன்கறிந்தவனாக இருக்கின்றான்”

முஸ்லிம்களே! இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மாபெரும் ஓர் இறைச் செய்தியை கொண்டுவந்துள்ளார்கள். மனித குலத்திற்கு அந்த இறைச் செய்தி நன்மையானவற்றையும், அவசியமானவற்றையும் உறுதிப்படுத்தியது. மனிதனுக்கு அமைதியையும், நிம்மதியையும், நல்லிணக்கத்தையும், பரந்த மனப்பான்மையையும் ஏற்படுத்திக் கொடுத்தது. இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்த இறைச் செய்தி ஈமானின் அடிப்படை கூறுகளை மிக அழுத்தமாக

தெளிவுபடுத்துகிறது. இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الْإِيمَانُ: أَنْ تُؤْمِنَ بِاللَّهِ، وَمَلَائِكَتِهِ، وَكُتُبِهِ، وَرُسُلِهِ، وَالْيَوْمِ الْآخِرِ، وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ

“இறை நம்பிக்கை என்றால் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குமார்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நீங்கள் நம்புவதாகும்; நன்மை, தீமை அனைத்தும் விதியின்படியே நடக்கின்றன என்றும் நீங்கள் நம்புவதுமாகும்" என்று கூறினார்கள்.( متفق عليه )

மேல்கூறிய அடிப்படைகளை யார் முழுமையாக நம்பிக்கை கொள்கிறாரோ அவரே முஸ்லிம் ஆவார். அவருடைய வணக்க வழிபாடுகள் குறைந்திருந்தாலும் அவர் முஸ்லிம்தான். ஏனெனில் இறைநம்பிக்கை என்பது மனம் சார்ந்ததாகும். அல்லாஹ்வை தவிர வேறு யாரும் மனங்களில் உள்ளவைகளை அறிய முடியாது.

فَعَنْ أُسَامَةَ بْنِ زَيْدٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا: أَنَّهُ أَدْرَكَ رَجُلاً يُقَاتِلُ الْمُسْلِمِينَ فِي سَاحَةِ الْمَعْرَكَةِ، فَلَمَّا رَأَى السَّيْفَ قَالَ: لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ. فَطَعَنَهُ فَوَقَعَ فِي نَفْسِهِ مِنْ ذَلِكَ، فَذَكَرَهُ لِلنَّبِيِّ صلى الله عليه و سلم فَقَالَ:« **أَقَالَ: لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَقَتَلْتَهُ ؟**». قُلْتُ: يَا رَسُولَ اللَّهِ إِنَّمَا قَالَهَا خَوْفًا مِنَ السِّلاَحِ. قَالَ:« **أَفَلاَ شَقَقْتَ عَنْ قَلْبِهِ حَتَّى تَعْلَمَ أَقَالَهَا أَمْ لاَ**

"எங்களை அல்லாஹ்வின் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் படைப்பிரிவொன்றில் அனுப்பி வைத்தார்கள். ஜுஹைனா குலத்தைச் சேர்ந்த "ஹுரக்காத்" கூட்டத்தாரிடம் நாங்கள் காலையில் சென்றடைந்தோம். (அவர்களுடன் நடந்த சண்டையில் அவர்களை நாங்கள் தோற்கடித்தோம்.) அப்போது நான் ஒருவரைச் சந்தித்தேன். (அவரை நாங்கள் சுற்றி வளைத்துக்கொண்டபோது) அவர், "லா இலாஹ இல்லல்லாஹ்" (அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை) என்று சொல்லிவிட்டார். நான் (எனது ஈட்டியால்) அவரைத் தாக்கி(க் கொன்று)விட்டேன். ஆனால் அது என் மனதில் உறுத்திக்கொண்டே இருந்தது. (திரும்பி வந்தபோது) நான் இது குறித்து இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சொன்னேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "**லா இலாஹ இல்லல்லாஹ் என்று அவர் சொன்ன பிறகுமா அவரை நீ கொன்றாய்?**" என்று கேட்டார்கள். "ஆயுதத்தை அஞ்சித்தான் அவர் இவ்வாறு சொன்னார், அல்லாஹ்வின் தூதரே!" என்று கூறினேன். "**அதை அவர் (உளப்பூர்வமாக) சொன்னாரா இல்லையா என்று அறிய அவருடைய இதயத்தை நீ பிளந்து பார்த்தாயா?**" என்று (கடிந்து) கேட்டார்கள்” என்று உஸாமத் இப்னு ஜைத் ரலியல்லாஹு அன்ஹுமா கூறுகிறார்கள்.(158 : مسلم)

எனவே எந்த முஸ்லிமையும் (காபிர்)இறைமறுப்பாளன் என்று கூறிவிடக்கூடாது. ஈமானின் மிக உயர்ந்த நற்செயலையும், மிக சிறிய நற்செயலையும் செய்து வரும் ஒரு முஸ்லிமான மனிதனை எப்படி காபிர் என்று சொல்லிவிட முடியும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الْإِيمَانُ بِضْعٌ وَسَبْعُونَ أَوْ بِضْعٌ وَسِتُّونَ شُعْبَةً، فَأَفْضَلُهَا قَوْلُ لَا إِلَهَ إِلَّا اللَّهُ

“இறைநம்பிக்கை என்பது "எழுபதுக்கும் அதிகமான" அல்லது "அறுபதுக்கும் அதிகமான" கிளைகள் கொண்டதாகும். அவற்றில் உயர்ந்தது "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை" என்று கூறுவதாகும். அவற்றில் தாழ்ந்தது, தொல்லை தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதாகும்” (متفق عليه)

அல்லாஹ்வின் அடியார்களே! ஒருவரை காபிர் என்று கூறுவது ஷரீஅத் அடிப்படையிலான சட்டமாகும். அந்த அதிகாரம் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே இருக்கிறது. என்ற போதிலும் இந்த பொறுப்பு ஷரீஅத் நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முஸ்லிமாக இருந்து கொண்டு இறைமறுப்பு கொள்கையை ஒருவன் பிரகடனப்படுத்துகிறான்(அல்லாஹ் பாதுகாப்பானாக) அல்லது அதற்கு ஒப்பான ஒரு சித்தாந்தத்தை பின்பற்றுகிறான். பின்னர் அந்த இறைமறுப்பு கொள்கையை புறக்கணித்து விட்டு திருந்தி வர மறுத்தால் அப்போது ஷரீஅத் நீதிபதிகள் அவனை “காபிர் என்று தீர்ப்பு வழங்குவார்கள். இஸ்லாமிய பாதையில் இருந்து விலகியவனாக கருதப்படுவான். மற்ற முஸ்லிம்களின் தொடர்பை விட்டு அவன் தனிமைப்படுத்தபடுவான். மற்ற இஸ்லாமிய ஷரீஅத் நடைமுறை வாழ்கையில் இருந்தும் அவன் விலக்கப்படுவான். எனவே சொத்துரிமை, திருமண உறவு, மரணித்த பிறகு நல்லடக்கம், உள்ளிட்ட பல தடைகள் அவன் மீது விதிக்கப்படும்.

இப்படி எத்தனையோ பேர் வழிதவறி செல்கிறார்கள். அவர்களின் சிந்தனை தவறான வளர்ச்சியை பெற்றுள்ளது. அவர்களின் பேச்சுகளும், எழுத்துகளும் வழிதவறிய சித்தாந்தங்களை பரப்புகின்றன. எதற்கெடுத்தாலும் தவறான, தான் தோன்றித்தனமான, அப்போதைக்கு தன் மனதில் உதிக்கும் ஆதாரமற்ற விளக்கங்களை தருகிறார்கள். இதனால் அப்பாவி மக்களின் சிந்தனைகளை வழிதவறச் செய்கிறார்கள். தனக்காவே இயக்கங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். இயக்க வளர்ச்சி என்ற பெயரில் தவறான கோஷங்களையும், முழக்கங்களையும் எழுப்புகிறார்கள். இந்த தூய மார்க்கத்தை தரைமட்டமாக்குவதே இவை அனைத்தின் நோக்கமாக இருக்கிறது. இப்படி கவர்ச்சிகரமாக பேசி வழிகெடுக்கும் மூடர்களை பற்றி இறைவன் பின்வருமாறு கூறுகிறான்: (2:204-205)

وَمِنَ النَّاسِ مَنْ يُعْجِبُكَ قَوْلُهُ فِي الْحَيَاةِ الدُّنْيَا وَيُشْهِدُ اللَّهَ عَلَى مَا فِي قَلْبِهِ وَهُوَ أَلَدُّ الْخِصَامِ* وَإِذَا تَوَلَّى سَعَى فِي الْأَرْضِ لِيُفْسِدَ فِيهَا وَيُهْلِكَ الْحَرْثَ وَالنَّسْلَ وَاللَّهُ لَا يُحِبُّ الْفَسَادَ

“(நபியே! உங்களிடம்) இவ்வுலக வாழ்க்கையைப் பற்றி(ப் பேசும்பொழுது) தன்னுடைய (சாதுரியமான) வார்த்தையைக் கொண்டு உங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கக்கூடிய ஒருவன்


www.sunnathwaljamath.com

அம்மனிதர்களில் உண்டு. அவன் (உங்கள்மீது அன்பு கொண்டிருப்பதாகக் கூறி) தன் மனதில் உள்ளவற்றிற்கு (சத்தியம் செய்து) அல்லாஹ்வை சாட்சியாக்குவான். (உண்மையில்) அவன்தான் (உங்களுக்குக்) கொடிய எதிரியாவான். அவன் (உங்களிலிருந்து) விலகினாலோ, பூமியில் விஷமம் செய்து (உங்கள்) விவசாயத்தையும் கால்நடைகளையும் அழித்துவிட முயற்சி செய்கின்றான். விஷமத்தை அல்லாஹ் விரும்புவதில்லை"

இப்படி சில குழப்பவாதிகள் பூமியில் குழப்பங்களை பரப்புகிறார்கள். இஸ்லாமிய நீதிபதிகள், உலமாக்கள், சில சமுதாயத்தினர், ஜமாஅத் அமைப்புகள், அரசாங்கம், பாதுகாப்பு படையினர் உள்ளிட்டவர்களை "காபிர்கள்" என்று இந்த குழப்பவாதிகள் கூறிக்கொண்டு திரிகிறார்கள். இப்படி கூறிக்கொண்டு திரிந்து கலகங்களை ஏற்படுத்த முனைகிறார்கள். பொது சொத்துக்கும், தனி நபர் உடமைகளுக்கும் சேதாரம் விளைவிக்க முயற்சிக்கிறார்கள்.

ஏற்கனவே இத்தகைய முரண்பாடான செயல்பாடுகளில் கவாரிஜிய்யா கூட்டத்தினர் ஈடுபட்டுள்ளனர். நமது தலைவர் அலி இப்னு அபூ தாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் இந்த கவாரிஜிய்யாக்கள் தனித்து செயல்பட்டு, குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டு, காபிர்களாக மாறிவிட்டார்கள். இதே சிந்தனையோடு இன்றைய நமது காலத்திலும் ஒரு சில கூட்டத்தினர் குழப்பங்களில் ஈடுபடுகிறார்கள். இவர்களின் செயல்பாடும் அணுகுமுறையும் முற்றிலும் கவாரிஜிய்யாக்களை ஒத்திருக்கிறது. யாரையும் உரிமையில்லாமல் கொலை செய்துவிடுகிறார்கள். விடைபெறும் ஹஜ்ஜின் போது இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த நல்லுபதேசத்தை மறந்துவிட்டார்கள்.

لَا تَرْجِعُوا بَعْدِي كُفَّارًا يَضْرِبُ بَعْضُكُمْ رِقَابَ بَعْضٍ

"எனக்குப் பின்னால் உங்களில் ஒருவர் மற்றவரின் பிடரியை வெட்டிக்கொள்ளும் நிராகரிப்பாளர்களாய் மாறிவிடாதீர்கள்" என்று இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ('விடைபெறும்' ஹஜ்ஜின்போது) கூறினார்கள்:.(متفق عليه )

இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்: ஒருவர் மற்றவரை காபிர் என்று கூறிக்கொண்டு சண்டை சச்சரவுகளில் ஈடுபடாதீர்கள் என்பது இந்த ஹதீஸின் பொருளாகும். (160/1 شرح النووي على مسلم)

"இந்த ஹதீஸின் பொருள்: ஒரு முஸ்லிமான சகோதரர் செய்த ஏதேனும் ஒரு பாவத்தையோ அல்லது விளக்கத்தையோ அடிப்படையாக கொண்டு அவரை வேறு எந்த முஸ்லிமும் காபிர் என்று சொல்லக்கூடாது என்பதாகும்" என்று இமாம் இப்னு அப்துல்பர் அல்மாலிகி அவர்கள் விளக்கம் தருகிறார்கள். ((14/17) : التمهيد لنا في الموطأ من المعاني والأسانيد)

முஸ்லிம்களே! அவ்வளவு சுலபமாக ஒருவரை காபிர் என்று சொல்வதை இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வன்மையாக கண்டித்துள்ளார்கள். அவ்வாறு காபிர் என்று கூறுவது அந்த முஸ்லிமை கொன்று அழித்தொழிப்பதற்கு சமமானது என்றும் எச்சரிக்கிறார்கள். அவனை பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாக்கும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:


www.sunnathwaljamath.com

مَنْ رَمَى مُؤْمِنًا بِكُفْرٍ فَهُوَ كَقَتْلِهِ

"ஓர் இறைநம்பிக்கையாளரை இறைமறுப்பாளர் என்று யார் அவதூறு சொல்கிறாரோ அவர் அவரைக் கொலை செய்வதைப் போன்றதாகும்" (6105 : البخاري )

இந்த தடை உத்தரவு மனித உரிமையை பாதுகாப்பதோடு, தனி ஒருவன் மீது எல்லை கடந்து ஆதிக்கம் செலுத்துவதை கண்டிக்கிறது. இவற்றை கருத்தில் கொள்ளாமல் நடப்பவர்களுக்கு பெரும் பாவம் ஏற்படும் என்பதையும் எச்சரிக்கையோடு உணர்த்துகிறது. இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَيُّمَا امْرِئٍ قَالَ لِأَخِيهِ: يَا كَافِرُ، فَقَدْ بَاءَ بِهَا أَحَدُهُمَا، إِنْ كَانَ كَمَا قَالَ، وَإِلَّا رَجَعَتْ عَلَيْهِ

"எந்த மனிதர் தம் (முஸ்லிம்) சகோதரரைப் பார்த்து "இறைமறுப்பாளனே!" ("காஃபிரே!") என்று அழைக்கின்றாரோ நிச்சயம் அவர்களிருவரில் ஒருவர் அச்சொல்லுக்கு உரியவராகி விடுகிறார்கள். அவர் கூறியதைப் போன்று இவர் இருந்தால் சரி! இல்லாவிட்டால் அவர் சொன்ன சொல் அவரை நோக்கியே திரும்புகிறது" (متفق عليه)

அதாவது, தன்னுடைய சகோதரன் மீது இவன் சுமத்திய குற்றம் தன்னை நோக்கியே திரும்புகிறது, அவனை காபிர் என்று சொன்ன பாவமும் தன்னை நோக்கியே வருவதை உணர்ந்து கொள்ள வேண்டும். (153/1 شرح النووي على مسلم)

தன்னுடைய சகோதரனை பொத்தாம் பொதுவாக காபிர் என்று கூறுவதை இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிக வன்மையாக கண்டிக்கிறார்கள்:

إِذَا كَفَّرَ الرَّجُلُ أَخَاهُ فَقَدْ بَاءَ بِهَا أَحَدُهُمَا

"ஒரு மனிதர் தம் (முஸ்லிம்) சகோதரரை "இறைமறுப்பாளர்" (காஃபிர்) என்று கூறினால் நிச்சயம் அவர்கள் இருவரில் ஒருவர் அச்சொல்லுக்கு உரியவராகி விடுகிறார்கள்" (متفق عليه)

முஸ்லிம்களைச் சார்ந்த ஒருவரை காபிர் என்று கூறுபவர்களுக்கு இந்த கண்டிப்பு மிகவும் வன்மையான எச்சரிக்கையாகும். ((44/3) إحكام الأحكام شرح عمدة الأحكام لابن دقيق العيد)

சஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்கள் மேல்கூறிய வழிமுறைகளை உண்மையாக பின்பற்றி வாழ்ந்தார்கள். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மேலான தத்துவங்களை சிறிதும் மாற்றம் இன்றி நடைமுறைப் படுத்தினார்கள். மனிதர்கள் மற்ற முஸ்லிம்களை காபிர் என்று சொல்வதை தடை செய்தார்கள். யாரும் மேற்கொண்டு அவ்வாறு சொல்லாத வண்ணம் இந்த சமூகத்தை காத்தார்கள்.

“நீங்கள் கிப்லாவை நோக்கி வணங்குபவர்களை அதாவது முஸ்லிம்களில் யாரையாவது “காபிர்” என்று கூறியிருக்கிறீர்களா?” என்று ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ரலியல்லாஹுஅன்ஹுமா அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், “கண்டிப்பாக இல்லை” என்றார்கள். “நீங்கள் யாரையேனும் முஷ்ரிக் என்று சொன்னதுண்டா?” என்று மறுபடியும் கேட்டேன். அதற்கு அவர்கள், “அல்லாஹ் பாதுகாப்பானாக!” என்று மட்டும் கூறினார்கள் என்று இந்த சம்பவத்தை அபூஸுப்யான் அவர்கள் கூறுகிறார்கள் ((230/7) 7354 : المعجم الأوسط للطبراني )

“தன்னை விட்டு வெளியேறி தனக்கு எதிராக போர் செய்த கவாரிஜிய்யாக்களை பற்றி அலி இப்னு அபூ தாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம், “உம்மை விட்டு விலகிச் சென்ற அவர்கள் முஷ்ரிக்குகள் தானே?” என்று கேட்கப்பட்டது. அதற்கு, “அவர்கள் எல்லாம் ஷிர்கை விட்டு வெளியேறிவர்கள்(ஷிர்கை விட்டு நீங்கியவர்கள்)” என்று அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பதிலளித்தார்கள். (16713 السنن الكبرى للبيهقي)

ஒரு முஸ்லிமை காபிர் என்று சொல்லும் ஒவ்வொருவருமே எல்லை கடந்து செயல்படுகிறார், தனக்கான கட்டுப்பாடுகளை மீறி செயல்படுகிறார் என்றுதான் பொருள். அல்லாஹ்வுடைய தனி அதிகாரத்தில் தன்னையும் மிக துணிச்சலோடு இணைத்துக் கொள்கிறார், அந்த முஸ்லிமுடைய தனி உரிமையில் வாதம் செய்கிறார். காரணம் ஒருவனை காபிர் என்று கணிப்பது அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உள்ள அதிகாரமாகும்.

யா அல்லாஹ் எங்கள் அனைவருக்கு மார்க்கை அறிவை தருவாயாக! எங்கள் தேசங்களை பாதுகாப்பாயாக!!

தொழுகையாளிகளே! இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும், நபிமார்களின் வாரிசுகளாக இருக்கும் உலமாக்களிடமே நாம் செல்ல வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் முதல் அறிவுரையாக இருக்கிறது. அந்த உலமாக்களிடம்தான் நாம் எந்த விளக்கத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இறைவன் நம் அனைவருக்கும் கட்டளையிடுகிறான்: (16:43)

فَاسْأَلُوا أَهْلَ الذِّكْرِ إِنْ كُنْتُمْ لَا تَعْلَمُونَ

"நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளாமலிருந்தால் (முந்திய வேதங்களைக்) கற்றோரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்"

لَا يَزَالُ النَّاسُ بِخَيْرٍ مَا أَخَذُوا الْعِلْمَ عَنْ أَكَابِرِهِمْ وَعَنْ أُمَنَائِهِمْ وَعُلَمَائِهِمْ, فَإِذَا أَخَذُوهُ مِنْ صِغَارِهِمْ وَشِرَارِهِمْ هَلَكُوا

“தங்களுடைய மூத்த குடிமக்கள், நம்பிக்கைக்கு உரியவர்கள், உலமாக்கள் போன்றவர்களிடம் இருந்து அறிவை பெறும் மனித சமூகத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஆனால் தீயவர்களிடமும், சிறுவயது இளைஞர்களிடமும் அந்த அறிவை பெறத்தொடங்கினால் நிச்சயம்

அழிந்துதான் போவார்கள்" என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்கள் கூறுகிறார்கள். ((155/1) الفقيه والمتفقه للخطيب البغدادي)

காரணம் வயதானவர்களுக்கு இளமைத்துடிப்பும், வேகமான போக்கும் இருக்காது. பல அனுபவங்களையும், திறமைகளையும் பெற்றிருப்பார்கள். எனவே அவர்களுடைய அறிவுத்திறனில் எந்த கசடும், சந்தேகமும் இருக்காது, சுய விருப்பத்திற்கு இடம் கொடுக்க மாட்டார்கள், எந்த ஆசைகளுக்கும் அடிபணிய மாட்டார்கள், ஷைத்தானால் அவர்களை எளிதில் வீழ்த்திவிடவும் முடியாது. ((156/1) الفقيه والمتفقه للخطيب البغدادي)

அமைதியான மற்றும் நிம்மதியான இந்த சமூகத்திற்காக நாம் அனைவரும் மேல்கூறிய ஆழமான சிந்தனைகளை அவசியம் கடைபிடிக்க வேண்டும். இல்லையெனில் பிரிவினைதான் ஏற்படும், நிச்சயம் ஒற்றுமை கிடைக்காது. அழிவுதான் ஏற்படும், நிச்சயம் ஆக்கப்பூர்வமான பணிகள் எதுவும் நடக்காது. நாம் அல்லாஹ்வுடைய ஒற்றுமை எனும் உறுதியான கையிற்றை பிடித்துக் கொள்ள வேண்டும். நம்முடைய தேசத்தின் ஒற்றுமையை காக்க வேண்டும், நம்முடைய ஆட்சியாளர்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும், அவர்களுக்கு கீழ்படிந்து நடப்பது இறைவனுக்கு கீழ்படிந்து நடப்பதின் அடையாளமாகும். அல்லாஹ் அவர்களுக்கு உதவியும், வெற்றிகளையும் தருவானாக என்று நாம் துஆச் செய்துகொள்ள வேண்டும்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹுஃ அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்: அல்லாஹ்வின் நல்லடியார்களே! வல்ல அல்லாஹ் நபி மீது ஸலவாத் சொல்லும் செயலை தன்னிடமிருந்தே தொடங்கி, அதில் மலக்குமார்களையும் சேர்த்து உண்மை முமின்களாகிய நம்மையும் சொல்லச்சொல்கிறான் : (33:56)

إِنَّ اللَّهَ وَمَلائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

"இந்த நபியின் மீது அல்லாஹ் (ஸலவாத் ஓதி) அருள்புரிகிறான். மலக்குகளும் அவருக்காக (ஸலவாத்ஓதி) அருளைதேடுகிறார்கள். மூமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத் சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்"

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மதுநபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள்



www.sunnathwaljamath.com

தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).